# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.175/2022

**07.07.2025**

**P.W.1- பிரபு**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் ஒன்று மட்டும் தெரியும். தாவா சொத்தின் நான்கு மால் தெரியும். எனது அப்பா பெயர் கருத்தக்கண்ணன் ஆகும். தாவா சொத்து எனது தாத்தா பேயாண்டித்தேவரின் பூர்வீக சொத்தாகும். எனது தாத்தாவின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு கருத்தக்கண்ணன் மற்றும் பிச்சைத்தேவர் என இரண்டு பிள்ளைகள் ஆவார்கள். தாவா சொத்து புள்ளநேரி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் பிறந்த நாள்முதல் புள்ளநேரியில் தான் குடியிருந்து வருகிறேன். எனது அப்பாவிடமிருந்து 5ம் பிரதிவாதி தேனம்மாள் என்பவர் 2002ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கிய நாள்முதல் நாளது தேதிவரை 5ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி அனுபவம் செய்வதை ஏன் தடுக்கவில்லை என்றால் நான் வெளியூரில் இருந்ததால் 5ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய தெரியாததால் நான் அவர் அனுபவம் செய்வதை தடுக்க முடியவில்லை. எனது அப்பா என்னை மைனராக காண்பித்து கிரையம் செய்து கொடுத்துள்ளார். அவ்வாறு மைனராக கட்டுப்படுத்தி கிரையம் செய்து கொடுத்ததால் 3 வருடங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றாலும், காலம்கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 வருடங்களுக்குள்ளாக தான் எனக்கு தெரியும். நான் உள்ளூரில் குடியிருப்பதால், எல்லாம் தெரிந்தும் கிரையம் தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா உயிருடன் இருக்கும்போது தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தனது இரண்டு மகன்களுடன் சேர்ந்து மூன்றாக பிரித்து கொண்டார்கள் என்றால் தெரியாது. 1991ல் எனது அப்பா, 4ம் பிரதிவாதியான பெரியப்பாவிற்கு தாவா சொத்தில் ஒரு 15 சென்டை கிரையம்

கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. 2002ல் எனது அப்பா கிரையம் கொடுக்கும்போது நானும், எனது சகோதரியும் மைனர் அல்ல, மேஜர் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் செய்த 12 வருடங்களுக்குள்ளாக வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும், காலம் கடந்ததால் எனது வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 2002ல் எனது அப்பா விற்பனை செய்த பின்பு தாவா சொத்தை நானும், எனது சகோதரரியும் உழவடை செய்யவில்லை என்றால் சரிதான். நான் வெளியூரில் இருந்தேன். அவ்வாறு வெளியூரில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 15 வருடங்களாகத்தான் கோயம்புத்தூரில் பெயின்ட்டிங் வேலை செய்து வருகிறேன். ஆதார் கார்டு என்னுடைய ஊர் முகவரியில் தான் இருக்கிறது. நான் 15 வருடங்கள் கழித்து ஒரு மாதத்திற்கு முன்புதான் ஊருக்கு வந்தேன். நான் 2022ல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, தற்போது ஒரு மாதத்திற்கு முன்பு தான் வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தேனம்மாள், தனது பிள்ளைகளுடன் 2010ல் பாகம் பிரித்துக்கொண்டார் என்றால் தெரியாது. எனது தந்தை தாவா கிராமத்தில் தான் குடியிருக்கிறார். அப்பாவிடம் கிரையம் குறித்து கேட்டேனா என்றால் கேட்டேன். 2022ல் தான் எனது தந்தையிடம் சொத்து பற்றி ஆவணங்களை கேட்டேன். அதற்கு அவர் அதை விற்பனை செய்துவிட்டதாக கூறினார். எனது அக்கா மதுரையில் குடியிருக்கிறார். எனது அக்காவுக்கு 1996ல் திருமணம் ஆனது. எனது அக்காவுக்கு வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. மேற்படி திருமணத்திற்கு அனைவரும் வந்திருந்தார்கள். திருமணம் ஆகி 6 வருடங்களாக தாவா கிராமத்தில் தான் குடியிருந்தார்கள். அதன்பின்பு தான் மதுரைக்கு சென்றார். அக்கா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லி தான் எனது அக்காவிற்கு தெரியும். பொய்யாக அக்காவுக்கு நான் சொல்லி தான் தெரியும் என கூறுகிறேன் என்றால் சரியல்ல. அக்கா சாட்சியம் அளிக்க முன்வருவரா என்றால் வருவார். எனது அக்கா தாவா கிராமத்திற்கு அடிக்கடி வருவார் என்றால் சரிதான். பணம் பறிக்கும் நோக்கில் கிரையம் பெற்றவர்களை தொந்தரவு செய்வதற்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா பேயாண்டித்தேவருக்கு ஒரு பாகம் கிடைத்து பிச்சை மகன்களுக்கு தான பத்திரம் எழுதி வைத்தது

தெரியுமா என்றால் தெரியாது. அனைத்து சங்கதிகளையும் தெரிந்து கொண்டு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1996, 2002 மற்றும் 2010ம் வருடங்களின் பத்திரங்களை செல்லாது என பரிகாரம் கேட்காததால் எனக்கு பாகம் கிடைக்காது என்றால் சரியல்ல. உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.07 17:20:14 +0530

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.